[2005 ஏப்ரல் 6

307—

மாணவர் விடுதி

***62184—திரு. எஸ்.எம். பாலன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடி பேரூராட்சியில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு விடுதி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழாது.*

திரு. எஸ்.எம். பாலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி வட்டம், புள்ளம்பாடி சிறப்பு ஊராட்சிப் பகுதியில் 1500 மாணவ, மாணவிகள் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 3 தனியார் நடுநிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஒன்றியத்தின் தலைமையிடமாக இருந்தும், இங்கு இதுவரை பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி தொடங்கப்படவில்லை. புள்ளம்பாடியைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 100 கிராமங்கள் இருக்கின்றன. ஏழையெளிய மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் மீண்டும் மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிய விடுதி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏற்கெனவே 28 பிற்படுத்தப்பட்டோர், 5 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 4 சீர்மரபினர் மாணவ, மாணவியர் விடுதிகள், ஆக மொத்தம் 37 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதிலே 24 மாணவர் விடுதிகளும், 13 மாணவியர் விடுதிகளும் உள்ளன. 25 விடுதிகள் அரசுக் கட்டடங்களிலும், 12 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்கின்றபோது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காக மொத்தமுள்ள 972 விடுதிகளில், 770 தனியார் விடுதிகளிலே அடிப்படை வசதியில்லாமல் மாணவச்*

2005. ஏப்ரல் 6]

செல்வங்கள் தவித்துக் கொண்டிருந்ததை மனதிலே வைத்துக்கொண்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு நிதிச் சிரமம் இருந்தாலும்கூட, வருங்காலச் சந்ததிகளான மாணவச் செல்வங்களுடைய வாழ்வினை மேம்படுத்துவதற்காக, புரட்சிகரமாக வரலாறு படைக்கக்கூடிய திட்டமாக, சுமார் 770 விடுதிகளில் இன்றைக்கு 630 விடுதிகளில் 312 விடுதிகளுக்கு கட்டடப் பணி தொடங்கப்பட்டும், வரக்கூடிய ஆண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 318 விடுதிகளுக்கு கட்டடப் பணி தொடங்கப்படவிருக்கிற நிலையில், புதிய விடுதிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டுசென்று, பரிசீலிக்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஆர். இராமசாமி, போன கேள்வியை இப்போது கேளுங்கள்.

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளிலே தங்கியிருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்குத் தரமான உணவு கிடைப்பதில்லை. ஒவ்வொரு மாணவருக்கும், நீங்கள் எவ்வளவு ரூபாய் ஒதுக்குகிறீர்கள்? அதை இன்னும் அதிகப்படுத்துவதற்கு வழியிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு, தரமான உணவு கிடைக்கிறது. மேலும் மாணவச் செல்வங்களுக்கு 225 ரூபாய் மாதம் ஒன்றுக்கு என்றிருந்ததை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, 300 ரூபாயாக அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று, கல்லூரிக் குழந்தைகளுக்கு, மாணவச் செல்வங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளம்பாடி ஒன்றியத்தில் மாணவர்கள் விடுதி தாமதமாகத் தொடங்கினாலும்கூட, மாணவிகள் விடுதி ஒன்றுகூட இல்லாமல், குக்கிராமங்களிலே வசிக்கும் மாணவ, மாணவிகள் மிகவும்

சிரமப்படுகிறார்கள். பெண்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறுவதில் பெரிதும் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சிறப்பு அனுமதியாக வருகின்ற கல்வியாண்டில் புதிதாகத் தொடங்கப்படுமா? தமிழக அரசின் அரசியல் வரலாற்றிலேயே யாருமே கட்டித்தர இயலாத அளவிற்கு, புதிய விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், லால்குடி தொகுதியில் வாளாடிக்கும், புதூர் பாளையத்திற்கும் புதிய விடுதிக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம் பிரபு.

திரு. இரா. இராம் பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வருடத்திற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது. இது அரசினுடைய ஒரு விதியாக இருக்கிறது. வருகிற நிதியாண்டில், இந்த விதியைத் தளர்த்தி, தொகுதியிலுள்ள வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அந்த நிதியை ஒதுக்கி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் அமைச்சர் முடிவு செய்யமுடியாது.

வினா எண் 308, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

308—

கால்நடை மருத்துவமனை

***37390—திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—